ET/SSS/2022(2023)/OL/62/T/Q/S-2

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | க.பொ.த. சாதாரண தரம் | 2022 (2023)

# Student Seminar Series

## மாணவர் கருத்தரங்கு தொடர்

Practice Paper | முன்னோடி வினாப்பத்திரம்

# Civic Education

# குடியியற் கல்வி



**Question Paper - I, II** | வினாப்பத்திரம் - I, II (மொழிமூலம்-தமிழ்)

Nenasa

The National e-learning Portal for The General Education

தொலைக்கல்வி மேம்பாட்டு பிரிவு | தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
**Ministry of Education, Sri Lanka**

| 62 | T | I, II |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப் பரீட்சை மாணவர் கருத்தரங்கு தொடர்- 2022 (2023)
**G. C. E. Ordinary Level Examination – Student Seminar Series - 2022 (2023)**

| | |
|---|---|
| පුරවැසි අධ්‍යාපනය | I, II |
| குடியியற் கல்வி | I, II |
| Civic Education | I, II |

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three Hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි.
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## குடியியற் கல்வி I

கவனிக்க

- எல்லா வினாக்களுக்கும் விடையெழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடைக்குரிய இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. சனநாயக ஆட்சி முறையின் விசேட அம்சங்களுள் ஒன்று
   (1) ஆட்சியாளன் வரையற்ற அதிகாரத்தை கொண்டிருத்தல்.
   (2) பிரசைகளின் பங்கேற்பு குறைவடைதல்.
   (3) ஊடக சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருத்தல்.
   (4) மக்களிடம் இறைமை அதிகாரம் காணப்படல்.

2. 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் கீழ் சனாதிபதியால் நியமிக்கப்படும் நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் நாயகம் எப்பெயரில் குறிப்பிடப்படுகின்றார்?
   (1) பிரதம நீதியரசர் (2) ஓம்பூட்ஸ்மன்
   (3) பொலிஸ்மா அதிபர் (4) சபாநாயகர்

3. அரசாங்கம்,
   (1) நிலையான நிறுவனமாகும்
   (2) அரசை ஒத்ததாகும்
   (3) பல்வேறு வடிவங்களைக் கொண்டிராது
   (4) அரசின் பிரதிநிதியாகும்.

4. சுவிட்சர்லாந்தில் நடைமுறையிலுள்ள பிராந்திய அரசுகளை குறிக்க பயன்படுத்தப்படும் சொல்,
   (1) மாநிலங்கள் (2) கூட்டரசு
   (3) பிரதேச சபைகள் (4) கென்ரன்

5. நீதிமன்றத்தின் உதவியை நாடும் மோதல் தீர்வு முறையொன்றாக அமைவது
   (1) நடுநிலை வகித்தல் (2) இணக்கப்பாடு
   (3) தீர்ப்புக் கூறல் (4) ஆலோசனை கூறல்

6. நுகர்வுப் பொருளொன்றையும் இடைநிலைப் பொருளொன்றையும் முறையே குறிக்கும் விடை
   (1) ஆடைகள், கனிய எண்ணெய்   (2) உணவுப் பொருட்கள், மருந்து
   (3) உபகரணங்கள், தளபாடங்கள்   (4) கட்டடங்கள், சீமெந்து

7. கிரேக்க நகராட்சியில் காணப்பட்ட நேரடி சனநாயக அம்சங்களுள் ஒன்று?
   (1) அதிகார வேறாக்கம் இடம்பெறவில்லை
   (2) பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது
   (3) அரசியல் அதிகாரம் ஆட்சியாளர்களுக்கு மட்டும் உரித்தாகியது
   (4) அரசியல் தீர்மானங்களில் பங்குபற்ற சகலருக்கும் சந்தர்ப்பம் கிடைத்தல்

8. மோதல் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்களை **'மோதல் முக்கோணம்'** எனும் மாதிரி மூலம் அறிமுகப்படுத்தியவர்?
   (1) ஈ. பி. டெய்லர்   (2) பேராசிரியர் காணர்
   (3) ஜொஹ்ஹான் கல்டுங்   (4) பிளேட்டோ

9. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சர்வதேச பிரகடனம் எப்போது வெளியிடப்பட்டது?
   (1) 1945 ஒக்டோபர் 12   (2) 1945 டிசெம்பர் 10
   (3) 1948 ஒக்டோபர 01   (4) 1948 டிசெம்பர 10

10. மனிதன் உட்பட சூழலில் காணக் கிடைக்கும் தாவரங்கள், உயிரினங்கள் மற்றும் நீர் வாழ் உயிரினங்களை கொண்ட சூழற் கூறு பின்வருவனவற்றுள் எது?
   (1) சூழல் வளங்கள்   (2) உயிர் கூறுகள்
   (3) இயற்கை வளங்கள்   (4) உயிரற்ற கூறுகள்

11. மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரின் தண்டனையை நிறைவேற்றுவதற்குத் தேவையான சிபாரிசுகளை சனாதிபதியிடம் முன்வைப்பவர்
   (1) சட்டமா அதிபர்   (2) பிரதம நீதியரசர்
   (3) முதலமைச்சர்   (4) நீதி அமைச்சர்

12. பண்பாட்டுரீதியான கடமைகளை நிறைவேற்றுவதில் நீதிபதியாக விளங்குவது
   (1) சட்டமா அதிபரின் ஆலோசனைகள். (2) பிரதம நீதியரசரின் ஆலோசனைகள்
   (3) நீதிமன்ற நீதிபதிகள்   (4) தனிமனிதனின் மனசாட்சி.

13. பொருளாதாரப் பண்டம், பொருளாதாரமல்லாத பண்டம் ஆகியவற்றை ஒழுங்கு முறையில் காட்டும் விடை
   (1) நீர், தங்க ஆபரணங்கள்   (2) உணவு, சூரிய ஒளி
   (3) வளி, நீர்   (4) உணவு, ஆடையணிகள்

14. ஆசியான் அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள இடம்,
   (1) இந்தியா - புதுடில்லி   (2) பங்களாதேஷ் - டாக்கா
   (3) இந்தோனேசியா - ஜகர்த்தா   (4) தாய்லாந்து - பாங்கொக்

15. சர்வதேச ஒத்துழைப்பை விருத்தி செய்து கொள்வதில் மிகவும் பயன்மிக்கதாக அமைவது
   (1) பெறுமதிமிக்க தொல்பொருட்கள்   (2) யுத்தங்கள்
   (3) தொடர்பாடல் ஊடகங்கள்   (4) இயற்கை அனர்த்தங்கள்

16. ''அறிவு, வழிபாடுகள், கலைகள், சட்டம், கலாசாரம் , பழக்கவழக்கம் மற்றும் சமூகத்தில் வாழ்வதன் மூலம் மனிதர்கள் பெற்றுக் கொள்கின்ற ஏனைய சகல பின்பற்றுதல்கள், ஆற்றல்கள் என்பவற்றின் மொத்த அமைப்பே பண்பாடு' எனக் கூறியவர்,
(1) சார்ள்ஸ். ஏ. எல்வூட் (2) டி.பி. டெயிலர்
(3) சீலர் (4) ஹெரல்ட் லஸ்கி

17. ஐக்கிய அமெரிக்க குடியரசின் சட்டத்துறையை குறிக்க பயன்படுத்தும் சொல் எது?
(1) தேசிய சபை (2) செனட் சபை
(3) காங்கிரஸ் (4) சமஷ்டிப் பேரவை

18. சனநாயக சமூகத்தில் ஊடகங்களால் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்பாக அமைவது
(1) ஆளுங் கட்சியின் கொள்கைகளுக்கு இணங்குதல்.
**(2)** உண்மையானதும் சரியானதுமான தகவல்களை மக்களுக்கு வழங்குதல்.
(3) சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத்துறை ஆலோசனைகளை கவனிக்காமை.
(4) சனநாயக கருத்துக்களுக்கு இடமளிக்காமை.

19. சிவில் சட்டத்தின் கீழ் தண்டனை பெறக்கூடிய குற்றச் செயல்களில் ஒன்று,
(1) கொலை (2) களவெடுத்தல்
(3) சிறுவர் துஷ்பிரயோகம் (4) ஒப்பந்தங்களை மீறுதல்

20. பித்தானியர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட பிரதான யாப்புச் சீர்திருத்தங்கள் முறையே,
(1) கோல்புறூக், குறூமக்கலம், மனிங், மனிங்டெவன்சியர், டொனமூர்.
(2) குறூமக்கலம், கோல்புறூக், மனிங் டெவன்சியர், டொனமூர், மனிங்.
(3) மனிங், கோல்புறூக், குறூமக்கலம், மனிங் டெவன்சியர், டொனமூர்.
(4) மனிங் டெவன்சியர், டொனமூர். கோல்புறூக், குறூமக்கலம், மனிங்.

21. பாராளுமன்றத்தில் மூன்றாவது முறையாக வாசிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்ட மூலம், யாருடைய கையொப்பத்தின் பின் சட்டமாக்கப்படும்?
(1) பிரதமர் (2) சபாநாயகர்
(3) ஆணையாளர் நாயகம் (4) சனாதிபதி

22. நவீன அரசுகள் அதிகாரப் பங்கீடு செய்வதற்கான காரணங்கள்,
(1) வேற்றுமையில் ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கு.
(2) மத்திய அரசாங்கம் வினைத்திறனற்றதாக காணப்படல்.
(3) சர்வதேச பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
(4) உலக அதிகாரப் போட்டிக்கு முகம் கொடுத்தல்.

23. பொருளாதாரமொன்றின் பிரதான செயற்பாடுகளை முறையே உள்ளடக்கியுள்ள விடையாக அமைவது
(1) உற்பத்தி, நுகர்வு, பங்கீடு.
(2) உற்பத்தி, களஞ்சியப்படுத்தல், பங்கீடு.
(3) உற்பத்தி, பங்கீடு, களஞ்சியப்படுத்தல்.
(4) உற்பத்தி, பங்கீடு, நுகர்வு

24. மனிதனுக்குத் தனது சமூக வாழ்வைப் பூரணப்படுத்திக் கொள்வதற்காக சமூகத்திலிருந்து கிடைக்கப்பெறும் நிபந்தனைத் தொகுதி
    (1) உரிமைகள். (2) சலுகைகள்
    (3) அதிகாரம். (4) சுதந்திரம்.

25. பன்மை பண்பாட்டுச் சமூகத்தில் மக்கள் ஒற்றுமையுடன் செயற்படுவதன் மூலம் கிடைக்கும் பயன்,
    (1) தேசிய ஐக்கியம் மற்றும் சகவாழ்வு நிலை விருத்தியடையும்.
    (2) தனிமனித உரிமை சுதந்திரம் பாதிக்கப்படும்
    (3) அந்நியோன்ய சகவாழ்வு மற்றும் நம்பிக்கைக்கு இடையூறு ஏற்படும்.
    (4) நாட்டின் பௌதீக மற்றும் மானிடவள அபிவிருத்தி தடைப்படும்

26. மத்திய திட்டமிடல் குழுவின் மூலம் பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நாடுகள் பின்பற்றும் பொருளாதார முறை பின்வருவனவற்றுள் எது?
    (1) முதலாளித்துவம் (2) சமதர்மம் (3) கலப்பு (4) சந்தை

27. இனப் பிரச்சினை, அரசியல், சமயக் கொள்கை வேறுபாடு மற்றும் சமூக பொருளாதார நிலை என்பன
    (1) மோதலுக்கான அடிப்படைக் காரணங்களாகும்.
    (2) தனியாள் மோதலுக்கான காரணங்களாகும்.
    (3) மோதல் வகைகளாகும்.
    (4) மோதல் தீர்வு முறைகளாகும்.

28. மனிதன் தனது மனதில் அமைதியை ஏற்படுத்திக் கொள்வதற்கான வழிமுறை ஒன்றல்லாதது
    (1) மன அழுத்தத்துடன் செயற்படல்
    (2) சமய நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.
    (3) உளவியல் பயிற்சிகளில் ஈடுபடுதல்.
    (4) இயற்கை சூழலை அவதானித்தல்.

29. பல மொழிகள் பேசும், பல சமயங்களைக் பின்பற்றும் பன்மை பண்பாட்டுச் சமூகத்தைக் கொண்ட நாடு,
    (1) இலங்கை. (2) பிரித்தானியா.
    (3) இந்தியா. (4) மலேசியா.

30. உலகில் காணப்படும் சர்வதேச அமைப்புக்களில் தமது அங்கத்துவ நாடுகளுக்கு மிகப் பாரிய அளவில் சேவையாற்றும் நிறுவனம்,
    (1) சார்க் (2) பொதுநலவாய நாடுகள்.
    (3) ஐக்கிய நாடுகள் சபை (4) நேட்டோ

31. இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களால் ஆற்றப்படும் சேவைகளுள் பொதுப் பயன்பாட்டுச் சேவையொன்று அல்லாதது
    (1) பொது இடங்களுக்கு மின்னொளி வசதி செய்தல்.
    (2) பொதுச் சந்தைகளை பரிபாலித்தல்.
    (3) பொது மலசலகூடங்களை அமைத்தலும், பரிபாலித்தலும்.
    (4) பொது வாசிகசாலைகளை ஏற்படுத்தி பராமரித்தல்.

32. மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரங்களை மாகாண மட்டத்திற்கு விஸ்தரிக்கும் நீதிமன்றம்,
(1) மாகாண மேல் நீதிமன்றம் (2) மேல் நீதிமன்றம்
(3) மாவட்ட நீதிமன்றம் (4) நீதவான் நீதிமன்றம்

33. நிலையான அபிவிருத்தியின் போது கவனத்திற் கொள்ள வேண்டிய காரணிகளாவன,
(1) இயற்கை வளங்களை பாதுகாத்தல், உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் தொழினுட்பம்.
(2) சுற்றாடலைப் பாதுகாத்து பராமரித்தல், எதிர்கால சந்ததியினரின் தேவைகளைப் பூர்த்தி செய்தல்
(3) நல்லெண்ணங்களை விருத்தி செய்தல், சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்தல்.
(4) சுற்றாடலைப் பாதுகாத்தல், சமூக நீதியை நிலைநாட்டுதல்

34. இராஜதந்திர உறவுகளை பலப்படுத்திக் கொள்ள ஏதுவாக அமையும் காரணி,
(1) யுத்த உபாயங்களை பரிமாறிக் கொள்ளல்.
(2) இராணுவ பயிற்சி பெற்றுக் கொள்ளல்.
(3) இரு தரப்பிலான அரச தலைவர்களின் சந்திப்புக்கள்.
(4) தேவையான ஆயுதங்களை வழங்குதல்.

35. ஒரு நாட்டின் அபிவிருத்தியை அளவிட பயன்படுத்தும் அளவீடுகள் இரு வகைப்படுவதோடு அவற்றுக்குரிய அளவைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A. மொத்த தேசிய உற்பத்தி
B. பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண்.
C. மொத்த தேசிய உற்பத்தியில் தலா வருமானம்.
D. மனித வறுமைச் சுட்டி
மேலே கூறப்பட்ட அளவைகளில் நவீன அளவீட்டு முறைகளாவன,
(1) A யும் B யும் (2) B யும் C யும். (3) B யும் D யும். (4) C யும் D யும்

36. குடியியல் மற்றும் உரிமைகள் மீதான சர்வதேச ஒப்பந்தத்துடன் இணைந்த முதலாவது விருப்பிலான பின்னேட்டின் படி,
(1) குற்றவாளியாக்கப்பட்ட நபரொருவருக்கு மரண தண்டனைக்கு பதிலாக மாற்றுத் தண்டனை வழங்க முடியும்.
(2) எதிர்காலத்தை பாதிக்கும் வகையில் பிறப்பிக்கப்படும் தண்டனையிலிருந்து விடுபட முடியும்.
(3) சிறுவர்களைக் கடத்தல், பலாத்காரமாக தடுத்து வைத்தலுக்கெதிராக தண்டனை வழங்க முடியும்.
(4) தமது நாட்டில் வழங்கப்பட்ட தீர்ப்பில் திருப்தியடையாவிட்டால் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு மேன் முறையீடு செய்ய முடியும்

37. 1947 சோல்பரி அரசியல் யாப்புச் சீர்திருத்தத்துடன் தொடர்புடைய மிக முக்கிய அம்சம் ஒன்று
(1) வரையறுக்கப்பட்ட வாக்குரிமை அறிமுகம்.
(2) சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாத்தல்
(3) சர்வசன வாக்குரிமை அறிமுகம்
(4) பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை அறிமுகம்.

❖ கீழே தரப்பட்டுள்ள ஒற்றையாட்சி மற்றும் சமஷ்டியாட்சி முறைகளின் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு வினா இலக்கம் 38, 39 ஆகியவற்றுக்கு விடை தருக.

A ஒரு மத்திய அரசின் கீழ் அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருத்தல்.

B அதிகாரத்தை மத்திய அரசுக்கும், பிராந்திய நிர்வாக அலகுகளுக்கும் இடையில் பண்முகப்படுத்துவதோடு அதனை மீளப் பெற முடியும்.

C இரு வகையான அரசாங்கங்களினால் செயற்படுத்தப்படும்.

D அதிகாரங்கள் ஒரு மத்திய அரசினால் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்படுதல்.

E எழுதப்பட்ட அரசியல் யாப்பு காணப்படுதல்

F சட்டவாக்கத் துறையில் மேற்சபையொன்று காணப்படல்

38. ஒற்றையாட்சி முறைக்குரிய பண்புகளைக் கொண்ட விடைத் தொகுதி

(1) ABD (2) ACD (3) BDE (4) DEF

39. சமஷ்டி ஆட்சிக்குரிய பண்புகளைக் கொண்ட விடைத் தொகுதி

(1) BEF (2) CDF (3) CEF (4) DEF

40. இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் **பொருத்தமற்ற** கூற்றைத் தெரிக

(1) அதிகார அல்லது நிர்வாக செயற்பாடுகள் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்படுமாயின் உயர்நீதிமன்றத்திற்கு மனுத்தாக்கல் செய்யலாம்.

(2) அடிப்படை மனிதஉரிமை மீறல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்கும் அதிகாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு உரியதாகும்.

(3) மனித உரிமைகள் மீறல் சம்பந்தமான வழக்குகளை எந்தவொரு நபரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்ய முடியும்.

(4) மனித உரிமை மீறல் தொடர்பான வழக்கில் குற்றவாளியாக்கப்பட்ட ஒருவருக்கு பாராளுமன்ற ஆணையாளரால் தண்டனை வழங்க முடியும்.

*****

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

| 62 | T | I, II |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப் பரீட்சை- மாணவர் கருத்தரங்கு தொடர்- 2022 (2023)
G. C. E. Ordinary Level Examination – Student Seminar Series - 2022 (2023)

| | |
|---|---|
| පුරවැසි අධ්‍යාපනය | I, II |
| **குடியியற் கல்வி** | I, II |
| **Civic Education** | I, II |

# குடியியற் கல்வி II

- **முதலாம் வினா** கட்டாயமானது.
- **முதலாம் வினாவுக்கும், வேறு நான்கு** வினாக்கள் உட்பட மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடையெழுதுக

1. (i) சனநாயக ஆட்சி முறையின் பெரும்பாலான பண்புகள் புராதன காலம் முதல் மேலைத்தேய, கீழைத்தேய நாடுகளில் காணப்பட்டுள்ளமைக்கான சான்றுகள் **இரண்டினை** குறிப்பிடுக.
   (ii) மாகாண சபையொன்றின் முதலமைச்சருக்குரிய அதிகாரங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
   (iii) அரசொன்றின் மூலக்கூறுகள் **இரண்டு** தருக.
   (iv) சனநாயகப் பிரசை ஒருவரிடம் காணப்பட வேண்டிய பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக
   (v) சமஷ்டி அரசான சுவிட்சர்லாந்தின் அரசகரும மொழிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
   (vi) பொருளாதார முறைமைகள் எதிர்நோக்குகின்ற அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் **இரண்டு** தருக
   (vii) உலகமயமாதல் காரணமாக இலங்கை அடைந்துள்ள நன்மைகள் **இரண்டு** எழுதுக.
   (viii) இலங்கையருக்கு வரையறுக்கப்பட்ட வாக்குரிமை, சர்வசன வாக்குரிமையை வழங்கிய அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் **இரண்டினையும்** ஒழுங்கு முறையே குறிப்பிடுக
   (ix) மோதல் வகைகளின் **இரு** பிரதான பிரிவுகளும் எவை?
   (x) இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக ( 02×10=20 புள்ளிகள்)

2. “ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்தின் நடத்தைக் கோலத்திற்கேற்ப சர்வதேச சமூகத்தின் இலங்கை மீதான செல்வாக்கு வேறுபடும்”

   I. இலங்கைக்கு கடன் மற்றும் உதவிகளைப் பெற்றுக் கொடுக்கும் சர்வதேச நிதி அமைப்புக்கள் **இரண்டைப்** பெயரிடுக. (2 புள்ளிகள்)
   II. சர்வதேச அமைப்புகளுக்குள் செயற்படும் பிராந்திய அமைப்புகள் **மூன்று** எழுதுக. (3 புள்ளிகள்)
   III. (a) சர்வதேச உறவுகள் ஏற்படும் வழிமுறைகள் **மூன்று** எழுதுக. (3 புள்ளிகள்)
   (b) மேலே (a) இல் குறிப்பிடப்பட்ட **ஓர்** வழிமுறையை சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள் )

3. “மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து, அவர்கள் மூலம் நாட்டின் ஆட்சி செயற்பாடுகளை முன்னெடுப்பது பிரதிநிதித்துவ சனநாயகம் ஆகும்”

   I. சனநாயக ஆட்சி முறையின் **இரு** பிரதான பிரிவுகளையும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
   II. சனநாயக ஆட்சி முறை முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் **மூன்று** எழுதுக. (3 புள்ளிகள் )

III. (a) சனநாயக ஆட்சி முறை வெற்றிபெற அவசியமான காரணிகள் **மூன்று** எழுதுக. (3 புள்ளிகள் )

(b) மேலே (a) இல் குறிப்பிடப்பட்ட **ஓர்** காரணியை சுருக்கமாக விளக்குக (2 புள்ளிகள்)

4. “தற்கால சமூகமானது மிகவும் சிக்கலார்ந்ததாக விளங்குகின்றது.”

I. ‘வேற்றுமைகளுக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துதல்’ என்பதை இலக்காகக் கொண்டு பன்மை பண்பாட்டுத் தன்மையை மிகவும் பயனுள்ளதாக ஆக்கிக் கொண்டுள்ள **இரு** நாடுகளைப் பெயரிடுக. (2 புள்ளிகள் )

II. சமூக நீதி வீழ்ச்சியடைவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் **மூன்று** எழுதுக. (3 புள்ளிகள் )

III. (a) பன்மை பண்பாட்டுச் சமூகத்தில் மக்கள் ஒற்றுமையுடன் செயற்படுவதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் **மூன்று** எழுதுக. (3 புள்ளிகள் )

(b) மேலே (a) இல் குறிப்பிட்ட நன்மை **ஒன்று** சமூகத்தின் நல்வாழ்விற்குக் காரணமாகும் முறையினை விளக்குக. (2 புள்ளிகள்)

5. “தற்காலத்தில் சுற்றாடல் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படுவதற்கான காரணம், மனித செயற்பாடுகளால் சூழல் பல்வேறு பாதிப்புக்களுக்கு உட்பட்டுள்ளமையாகும்.”

I. மனித செயற்பாடுகளினால் ஏற்படும் சுற்றாடற் பிரச்சினைகள் **இரண்டு** எழுதுக. (2 புள்ளிகள்)

II. அபிவிருத்திச் செயன்முறையின் போது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் **மூன்று** எழுதுக. (3 புள்ளிகள் )

III. (a) ஒரு நாடு நிலையான அபிவிருத்தியை அடைந்துகொள்ள பயன்படுத்தும் 3R எண்ணக்கருக்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக (3 புள்ளிகள் )

(b) வளங்களின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக உலகில் கைக்கொள்ளப்படும் வழிமுறைகள் **இரண்டு** எழுதுக. (2 புள்ளிகள்)

6. “சட்டம் தொடர்பாக அறியாமல் இருத்தல் அதிலிருந்து தப்பிச் செல்வதற்கான வழியன்று.”

I. சட்டவாட்சி உறுதிப்படுத்தப்பட்ட சமூகமொன்றில் காணக்கூடிய பண்புகள் **இரண்டு** எழுதுக. (2 புள்ளிகள்)

II. நீதியை நிலைநாட்டுவதில் முக்கியத்துவம் பெறும் **மூன்று** விடயங்களைக் குறிப்பிடுக (3 புள்ளிகள்)

III. (a) தேசிய சட்டம் **மூன்று** வகைப்படும். அவை எவை? (3 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் குறிப்பிடப்பட்ட **ஓர்** சட்டத்தை சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)

7. “மனிதர்கள் சமூகமாக இணைந்து வாழும் போது பல்வேறு தேவைகளும் விருப்பங்களும் உருவாகின்றன.”

I. பின்வரும் அடிப்படைத் தேவைகளுடன் தொடர்புடைய விருப்பங்கள் **இரண்டு** வீதம் எழுதுக.
அ) உணவு
ஆ) வீடுகள் (2 புள்ளிகள்)

II. உற்பத்தி செய்யப்படும் பொருட்களை அவை பயன்படுத்தப்படுகின்ற விதத்திற்கேற்ப **மூன்று** வகைப்படுத்தலாம். அவை எவை? (3 புள்ளிகள்)

III. (a) உலகமயமாதல் காரணமாக இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள பாதகமான விளைவுகள் **மூன்று** எழுதுக. (3 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் குறிப்பிட்ட பாதகமான விளைவுகளில் **ஒன்றை** தீர்த்துக் கொள்ளும் முறையினை சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)

*****